ஊடக அறிக்கை

தொடர்பூட்டல் திணைக்களம், இல.30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை
+94 11 2477424 / +94 11 2477421 +94 11 2346304
communications@cbsl.lk / dcommunications@cbsl.lk www.cbsl.gov.lk

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

வெளியிடுபவர் தொடர்பூட்டல் திணைக்களம்
திகதி 2026.06.30

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது 2026 யூனில் மேலும் அதிகரித்தது

கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணினை[1] (கொநுவிசு, 2021=100) அடிப்படையாகக் கொண்ட முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்கு ஆண்டு) 2026 யூனில் மேலும் அதிகரித்தமையானது எதிர்பார்க்கப்பட்டவாறு மத்திய கிழக்கு யுத்தத்தின் காரணமாக உள்நாட்டு வலு விலைகளிற்கான தொடர்ச்சியான மேல்நோக்கிய சீராக்கங்களின் ஊடுகடத்தலினைப் பிரதிபலித்தது. இதற்கமைய, முதன்மைப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2026 மேயில் பதிவாகிய 5.5 சதவீதத்துடன் ஒப்பிடுகையில் 2026 யூனில் 6.8 சதவீதமாகப் பதிவுசெய்யப்பட்டது.

பணவீக்கம் கொநுவிசு (2021=100)	2026 மே	2026 யூன்
சுட்டெண் பெறுமதி	203.4	207.7
மாதாந்த மாற்றம் (%)	0.9	2.1
ஆண்டிற்கு ஆண்டுப் பணவீக்கம் (%)	5.5	6.8

உணவல்லாப் பணவீக்கம் (ஆண்டிற்காண்டு), 2026 மேயில் பதிவாகிய 7.8 சதவீதத்திலிருந்து 2026 யூனில் 8.4 சதவீதத்திற்கு அதிகரித்தமையானது முதன்மைப் பணவீக்கத்தின் அதிகரிப்பிற்கு முக்கியமாகப் பங்களித்தது. உணவுப் பணவீக்கமும் (ஆண்டிற்காண்டு) 2026 மேயில் பதிவாகிய 0.9 சதவீதத்திலிருந்து 2026 யூனில் 3.6 சதவீதத்திற்கு அதிகரித்தது.

மாதாந்த அடிப்படையொன்றில், கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது 2026 யூனில் 2.1 சதவீத அதிகரிப்பொன்றினைப் பதிவுசெய்தது. இவ்வதிகரிப்பானது பெருமளவில் மீன் மற்றும் காய்கறிகள் என்பவற்றின் விலைகளில் ஏற்பட்ட அதிகரிப்பின் காரணமாக 1.4 சதவீத புள்ளிகளினால் பங்களித்த உணவு வகையினால் உந்தப்பட்ட அதேவேளை உணவல்லா வகையானது 0.7 சதவீத புள்ளிகளினால் பங்களித்தது.

அதேவேளை, மையப் பணவீக்கமானது (ஆண்டிற்காண்டு) 2026 மேயில் பதிவாகிய 3.9 சதவீதத்திலிருந்து 2026 யூனில் 4.0 சதவீதத்திற்கு சிறிதளவு அதிகரித்தது.



2026இன் இரண்டாம் காலாண்டிற்கான அடையப்பட்ட காலாண்டுச் சராசரிப் பணவீக்கமானது மத்திய வங்கியின் அண்மைய பணவீக்க எறிவுகளுடன் பரந்தளவில் ஒத்திசைந்து செல்லும் விதத்தில் தொடர்ந்தும் காணப்பட்டது. கிடைப்பனவாகவிருந்த தகவல்கள் மற்றும் ஊகங்கள் என்பவற்றின் அடிப்படையிலமைந்த 2026 மே மாத நாணயக் கொள்கைச் சுற்றில் மேற்கொள்ளப்பட்ட பணவீக்க எறிவுகள் முதன்மைப் பணவீக்கமானது பொருத்தமான கொள்கை வழிமுறைகளினால் ஆதரவளிக்கப்பட்டு, நடுத்தர காலத்தில் இலக்கினை அண்மித்துத் தளர்வடைவதற்கு மற்றும் உறுதிநிலைப்படுத்தப்படுவதற்கு முன்னர் எதிர்வருகின்ற காலப்பகுதியில் 5 சதவீத இலக்கிற்கு மேலாகத் தொடர்ந்தும் காணப்படக்கூடுமென்பதனைக் குறித்துக்காட்டுகின்றன. இருப்பினும், மத்திய கிழக்கில் நிலவுகின்ற பதற்றங்களின் நிலையற்றதன்மை மற்றும் உலகளாவிய மற்றும் உள்நாட்டு ஆகிய இரண்டிலுமான பொருளாதார நடவடிக்கைகளிடையேயான பரந்தளவிலான கசிவுத்தாக்கங்கள் என்பவற்றிற்கு மத்தியில் உள்நாட்டுப் பணவீக்கத் தோற்றப்பாடானது தொடர்ந்தும் உயர்வடைந்த நிச்சயமற்றதன்மைக்குட்பட்டுக் காணப்படுகின்றது.

அடிப்படை காலாண்டு முதன்மைப் பணவீக்க எறிவுகள்[அ]

கொநுவிசு[அ], ஆண்டிற்கு ஆண்டு

2026 மே நாணயக் கொள்கைச் சுற்றின் போதான எறிவுகளை அடிப்படையாகக் கொண்டது



அ/ *குறிப்பு: எதிர்வுகூறல் என்பது வாக்குறுதியோ அன்றில் கடப்பாடோ அல்ல.* இங்கே காட்டப்பட்டுள்ள பணவீக்க வீச்சு வரைபடமானது படிப்படியாக மங்கலடைகின்ற நிறங்களுடைய நம்பிக்கை இடைவெளிகளைப் பயன்படுத்தி அடிப்படை எறிவுப் பாதையைச் சூழ்ந்துள்ள நிச்சயமற்றதன்மையினைத் தெளிவுபடுத்துகின்றது. 2026 மே எதிர்வுகூறல் சுற்றில் கிடைப்பனவாக இருந்த தரவுகள், மேற்கொள்ளப்பட்ட ஊகங்கள் மற்றும் தீர்மானங்கள் என்பவற்றை வீச்சு வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட எறிவுகள் பிரதிபலிக்கின்றன. இதற்கமைவாக, அடிப்படையான நிலைமைகளில் எவையேனும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் இந்த எறிவுகளிலிருந்தான குறிப்பிடத்தக்க விலகல்களுக்கு வழிவகுக்கக்கூடும்.

ஆ/ வீச்சு வரைபடத்திலுள்ள அடையப்பெற்ற தரவுகள் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் (2021=100, பருவகால ரீதியில் சீராக்கப்பட்டது) அடிப்படையிலமைந்துள்ளன. எறிவுகள் அனைத்து கிடைக்கப்பெறுகின்ற தரவுகளையும் அடிப்படையாகக் கொண்டுள்ளன.

§ *2023 ஒத்தோபரில் இலங்கை மத்திய வங்கிக்கும் நிதி அமைச்சருக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட நாணயக்கொள்கை கட்டமைப்புசார் உடன்படிக்கையின் கீழ் பணவீக்க இலக்கு (5%) இணங்கிக்கொள்ளப்பட்டது.*

மூலம்: மத்திய வங்கி அலுவலர் எறிவுகள்

[1] கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணானது (கொநுவிசு, 2021=100) கொழும்பு மாவட்டத்தின் நகர் பிரதேசங்களிலுள்ள வீட்டலகுகளால் கொள்வனவு செய்யப்படுகின்ற பொருட்கள் மற்றும் சேவைகளின் விலைகளிலுள்ள சராசரி மாற்றங்களை குறித்துக்காட்டுவதற்கு தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் தொகுக்கப்படுகின்றது.

துணை வகைப்படுத்தல் (ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்) அடிப்படையில் கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணை அடிப்படையாக் கொண்ட முதன்மைப் பணவீக்கம் (2021=100)



கொழும்பு நுகர்வோர் விலைச் சுட்டெண்ணின் அசைவு (2021=100)

காலம்		சுட்டெண் எண்ணிக்கை		மாதாந்தச் சதவீத மாற்றம்		ஆண்டிற்கு ஆண்டு சதவீத மாற்றம்		ஆண்டிற்கான சராசரி சதவீத மாற்றம்	
ஆண்டு	மாதம்	கொநுவிசு சுட்டெண்	கொநுவிசு (மைய)	கொநுவிசு சுட்டெண்	கொநுவிசு (மைய)	கொநுவிசு சுட்டெண்	கொநுவிசு (மைய)	கொநுவிசு சுட்டெண்	கொநுவிசு (மைய)
2025	யூன்	194.5	180.1	0.9	0.5	-0.6	1.5	-1.4	2.1
	யூலை	194.1	180.8	-0.2	0.4	-0.3	1.6	-1.6	1.9
	ஓகத்து	193.3	180.9	-0.4	0.1	1.2	2.0	-1.5	1.8
	செத்தெம்பர்	193.7	181.2	0.2	0.2	1.5	2.0	-1.4	1.7
	ஒத்தோபர்	193.8	181.4	0.1	0.1	2.1	2.2	-1.2	1.6
	நவெம்பர்	193.4	181.3	-0.2	-0.1	2.1	2.4	-0.8	1.6
	திசெம்பர்	195.8	181.8	1.2	0.3	2.1	2.7	-0.5	1.6
2026	சனவரி	197.0	182.5	0.6	0.4	2.3	2.3	0.0	1.7
	பெப்புருவரி	195.3	182.3	-0.9	-0.1	1.6	2.1	0.5	1.8
	மாச்சு	195.8	183.0	0.3	0.4	2.2	2.5	0.9	2.0
	ஏப்பிறல்	201.6	185.6	3.0	1.4	5.4	3.8	1.6	2.2
	மே	203.4	186.1	0.9	0.3	5.5	3.9	2.1	2.4
	யூன்	207.7	187.3	2.1	0.6	6.8	4.0	2.7	2.6

மூலம்: தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களம்

குறிப்பு: தொகைமதிப்பு புள்ளிவிபரத் திணைக்களத்திற்கமைவாக, ஆண்டுக்கு ஆண்டுப் பணவீக்கமும் மாதாந்த மாற்றமும் முழுத்தானமாக்கப்பட்ட சுட்டெண் இலக்கங்களைப் பயன்படுத்தி கணிப்பிடப்பட்டன.